<u>DEPOSITION OF WITNESS</u>
<u>(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)</u>
<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.</u>

| | |
|---|---|
| Case No. | CC . 213/2016 |
| Deposition of Witness for | PW 1 |
| Name | துரைராஜ் |
| Father / Husband Name | வீரனசாமி |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 11th March 2025.

---

<u>**(எதிரி ஆஜர்).**</u>

<u>**முதல் விசாரணை:-**</u>

1) நான் காளையார்கோவில் ஐயூரணி தட்சன் கண்மாய் தெருவில் வசித்து மளிகைக் கடை வைத்து நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். ஆஜர் எதிரி தான் வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டவர். எனது அம்மா பரமேஸ்வரி என்பவர் பெயரில் இண்டன் கேஸ் இணைப்பு ( எண் தற்சமயம் ஞாபகமில்லை) சிவகங்கை விநாயகா கேஸ் ஏஜென்சி மூலம் பெற்று இரண்டு சிலிண்டர்கள் வாங்கி பயன்படுத்தி வருகிறோம். அதில் ஒரு சிலிண்டர் கேஸ் முடிந்துவிட்டது என்பதால் என் வீட்டு வாசலில் எனது சைக்கிளிலில் காலியான ஒரு கேஸ் சிலிண்டரை ஏற்றி புது கேஸ் சிலிண்டர் வாங்குவதற்காக 30.01.2015 ம் தேதி மதியம் 02.00 மணியளவில் எனது சைக்கிளின் கேரியரில் ஒரு காலி சிலிண்டரை கட்டி வைத்துவிட்டு கேஸ் சிலிண்டர்

Web Copy

பதிவு புத்தகத்தை எடுப்பதற்காக வீட்டிற்குள் சென்று புத்தகத்தை எடுத்துவிட்டு வெளியில் வந்து பார்த்தபோது நான் சைக்கிளில் கட்டி வைத்திருந்த காலி சிலிண்டர், சைக்கிளைக் காணவில்லை.

2) உடனே நான் எனது இரு சக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு தேடிப் பார்த்த போது காளையார்கோவில் ஆசிரியர் பயிற்சி பள்ளி முன்பு எனது சைக்கிளை கேஸ் சிலிண்டருடன் ஆஜர் எதிரி ஓட்டிச் சென்றதைப் பார்த்து நான் எதிரியை மறித்து பிடிக்க முற்பட்டபோது அவர் ஓட முற்பட்டார். அற்குள் பாலமுருகன் என்பவர் அந்த இடத்திற்கு வந்துவிட்டதால் அவரது உதவியுடன் ஆஜர் எதிரியைப் பிடித்து விசாரித்தபோது பணம் இல்லாததால் எடுத்து வந்ததாக சொன்னவரை சைக்கிள் மற்றும் சிலிண்டருடன் ஆஜர் எதிரியை நானும் பாலமுருகனும் சேர்ந்து காளையார்கோவில் காவல் நிலையம் அழைத்துச் சென்று ஒப்படைத்தேன். எதிரி மீது நடவடிக்கை எடுக்கும்படி புகார் மனு கொடுத்தேன்.

3) எதிரி திருடிச் சென்ற மேற்படி பொருள்களின் அப்போதைய மதிப்பு சுமார் 2,500 ரூபாய் இருக்கும். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் மனுவில் நான் தமிழிலும் ஆங்கிலத்திலும் கையொப்பங்களை செய்தேன். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேற்படி சைக்கிள் மற்றும் சிலிண்டரை நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக்கொண்டேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-**

1) காணாமல் போன சிலிண்டர் என் அம்மா பெயரில் பதிவு செய்யப்பட்டிருப்பதை காண்பிப்பதற்கான கேஸ் புத்தகத்தை நான் போலீசாரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான் ஆனால், இணைப்பின் எண்ணை பார்த்துக் குறித்துக் கொண்டார்கள். சைக்கிள் என்ன கம்பெனி என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை அது Hero cycle. எனது சைக்கிளை சிலிண்டருடன் யார் எடுத்துச் சென்றது என்று எனது பக்கத்து வீட்டில் வசிப்பவர்கள் யாரும் என்னிடம் வந்து குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான் நான் தான் தேடிக் கண்டுபிடித்தேன்.

2) புகாரை யார் எங்கு வைத்து எழுதியது என்றால் காவல் நிலையத்தில் வைத்து நான் தான் எழுதினேன். புகாரில் எதிரியின் வயது, முகவரி குறித்து குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் எதிரி எனக்கு பரிட்சையமில்லாதவர் என்பதால் நான் சொல்லவில்லை. நான் சொல்வது போல் வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் போலீசார் தயார் செய்த புகார் மனுவில் நான் கையொப்பம் செய்தேன் என்றாலும் சரியல்ல. உண்மையிலேயே வழக்குச் சொத்து என்னுடையதாக இருந்திருந்தால் நான் நீதிமன்றத்தில் மனு செய்து பொருள்களைப் பெற்றிருப்பேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

**(ஒம்)திரு.P.செல்வம், B.Sc., B.L., 11.03.2025,**
நீதித்துறை நடுவர் எண்.1,
சிவகங்கை.

Web Copy